B. வருவாய் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்.)
57	சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	55,02
58	சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.	10,33,00
61	பல்வகை மூலதனச் செலவு	3,21,39
மொத்தம்—B வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு		22,37,28

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

62	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்	7,08,94
	பெரு மொத்தம்	1,61,28,51

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.